(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

சீக்கிரம் வெளியேற்றுங்கள். மற்ற அலுவல்கள் நடக்க வேண்டும், (குறுக்கீடுகள்) நான் மற்ற அலுவல்களை எடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) சத்தம் போடாமல் போங்கள். காவலர்கள், லாபியில் கோஷம் போடுபவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு சென்றனர்.)

முற்பகல் 11-05

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *(குறுக்கீடுகள்) உட்காருங்கள். காலையிலே உங்களிடம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அனுமதி இல்லை. இன்று காலையில்தான் நீங்கள் கொடுத்தீர்கள். துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் கிடைத்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து இப்போதுதான் கொடுத்தார். காலையிலேயே அவரிடம் இதுகுறித்து சொல்லிவிட்டேன். Department-க்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். நீங்கள் ஒத்துழையுங்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்தான் சொல்லிவிட்டேனே!*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்கள் உட்காரவும். பேரவை முன்னவர் பேசுகிறார். உட்காருங்கள்.*

2012 நவம்பர் 1]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரம் முடிந்தவுடன் Zero Hour-ல் ஏதாவது ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட சட்டமன்றக் கட்சியினுடைய பொறுப்பாளர் ஒருவர் எழுந்து அவர் சபாநாயகரிடம் முறைப்படி அனுமதி கேட்க வேண்டும். இதை விடுத்து, சட்டமன்றக் கட்சியில் இருக்கின்ற அந்த கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து, ஒரே குரலில் கேள்வி எழுப்பினால் இது நடைமுறைக்கு, சட்டமன்ற விதிகளுக்கு, சட்டமன்ற மரபுக்கு ஒத்துவரக்கூடிய விஷயம்தானா என்பதை இங்கே எதிர்த்தரப்பில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் புரிந்துகொண்டு சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். உங்களை நான் அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். நான் ஒரு அறிவிப்பு கொடுக்க வேண்டும். உட்காருங்கள். இதோ பாருங்கள். நீங்கள் என் அறைக்கு வந்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து நான் விசாரிக்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) விசாரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் உடனே இதுபற்றி என்னைக் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள். காலையில்தான் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தயவு செய்து ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: காவல் துறை எடுத்த நடவடிக்கைக்கு, வெளியே போக வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு நாளும் ஒரு நாடகம், கபட நாடகம் நடத்துகிறீர்கள்.

நீங்கள் நடத்துவது எல்லாம், திட்டம் போட்டு குழப்பம் விளைவிப்பது, திட்டம்போட்டு செயல்பட விடாமல் தடுப்பதுதான். ஏற்கெனவே இதைத்தான் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வெளியேறுவதாகச் சொல்லிவிட்டீர்களே. வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்)*

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(ஆ) தென் மாவட்டங்களில் அமைதியை நிலைநாட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அ. சவுந்தரராசன், இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்தீர்கள். அவை தொடங்குவதற்குமுன் (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) லாபியில் யாரும் கோஷம் போடுவதற்கு அனுமதிக்காதீர்கள். திரு. அ. சவுந்தரராசன் சொல்லுங்கள்.*

****திரு. அ. சவுந்தரராசன்:** *தென் மாவட்டங்கள் முழுவதும் கலவரங்கள் பரவிக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே நடந்த கலவரத்தின்மீது ஒரு உயர்மட்ட விசாரணை வேண்டும். அமைதியை நிலைநாட்டுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

முற்பகல் 11-10

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. அ. சவுந்தரராசன்: *புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு வேகமான நிவாரணம் வேண்டும். பல பகுதிகளிலே வீடுகள், பயிர்கள், மரங்கள், மின்கம்பங்கள் இவை சாய்ந்து பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நடவடிக்கை வேண்டுமென்று அவையின் கவனத்தை நான் ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அவை துவங்குவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்புதான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தீர்கள். நான் அதை அனுப்பி பதில் வாங்கி அதைப்பற்றி பேசுகிறேன் என்று சொன்னேன். நீங்கள் திடீரென்று இப்படி எழுந்து கேட்கிறீர்கள் (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?*

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 1

உறுப்பினர்கள் மேற்கூறிய அவை உரிமை மீறல் குற்றத்திற்கு ஆளாகியுள்ளதால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்திலே கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஏற்கெனவே 31-10-2012 அன்று பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி உள்ளதால் மேற்படி உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களுடைய 31-10-2012 ஆம் நாளிட்ட கடிதத்தினையும் அவை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன், ஒரு நிமிடம் உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்கெல்லாம் அம்மா அவர்கள் சரியான பதிலைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு அம்மா அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இன்று Zero hour-ல் உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகள், அம்மா அவர்களின் கவனத்தில் இருப்பதால் அவர்களே அதற்குப் பதில் சொல்வார்கள். Wait பண்ணுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11-25

5. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவில் பங்கேற்க மேதகு குடியரசுத் தலைவர், ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952 ஆம் ஆண்டு அமைக்கப்